# கொடையும் ஈகையும் பரிசிலும்

**மு. சசிரேகா**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலைக் கல்லூரி
நிலக்கோட்டை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தமிழிலக்கிய மரபில் தனிச்சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் சமூகத்தின் நிலையையும், வாழ்க்கை முறையையும் சங்கஇலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. பொருளைப் பிறர்க்கு அளிக்கும் ஈதலும்,கொடையும் சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன. வாழ்வின் பொருளாதாரத் தேவைகள் குறைவாக இருந்துள்ளன. ஆகவே ஈட்டிய பொருளில் எஞ்சி நிற்பதைப் பிறர்க்கு அளித்து மகிழ்தலே சிறப்புப் பெற்றிருந்தது. அத்தகைய கொடைத் தன்மையைப் பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கொடையின் பெருமை

கொடை என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளதாகும். செல்வச்சிறப்புடன் வாழ்பவர்கள் செல்வத்துப் பயன் ஈதல் என்று பெருமிதத்தோடு செயல்புரிந்து வந்தார்கள். அவ்வாறு பிறருக்குக் கொடுப்பதில் அரசாட்சி புரிவோர் முதன்மை இடம் பெற்றுத் திகழ்ந்தனர். கொடுக்கப்படும் கொடைத்தன்மை பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது. அரசன் தன்னுடைய பொருளைக் கொடையாகக் கொடுத்தல், திறைப்பொருளைக் கொடையாகக் கொடுத்தல், போர் வழியாகப் பெறப்பட்ட பொருட்களைக் கொடையாகக் கொடுத்தல் எனப் பல தன்மைகளைக் காணமுடிகிறது.

எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம். வீரம் எனினும் அமையும். இது பிறத்தற்கான நிலைக்களன்களுள் கொடையும் ஒன்று என்பது தொல்காப்பியர் கருத்து என்பதை, “கொடை என்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்” என்று தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் விளக்குகிறார். பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறுத்தி இவ்வழியே இவனிடம் செல்க என்று வழிப்படுத்துதலாகிய ஆற்றுப்படை இலக்கியங்களில் வள்ளல்களின் பெருமை பேசப்படுகிறது. பரிசில் பெற்றுவரும் புலவனே மன்னன் போல யானைமீதேறி வரும் செய்தி குறிக்கப்படுகிறது. ஏழை, எளிய சிறுகுடி மக்களும் ‘உணவுக்கொடை’ வழங்கியுள்ளனர். “சங்ககால அரசர்கள் அறம் நோக்கியும், கலை வளர்ச்சி பற்றியும், ஊழியப் பாராட்டாகவும், வினையூக்கற் பொருட்டும் பல்வேறு கொடை நிகழ்த்தி வந்தனர். அவை,

1. உண்டிக் கொடை 2. பொற் கொடை 3. ஊர்திக் கொடை
4. விலங்குக் கொடை 5. சின்னக் கொடை 6. பெயர்க் கொடை

7. நிலக் கொடை 8. மகற் கொடை 9. ஆட்சிக் கொடை
என ஒன்பது வகைப்படும் என்ற கருத்தைப் 'பழந்தமிழாட்சி' என்ற நூலில் ஞா.தேவநேயன் கூறியுள்ளார்.

பிறர் துன்பத்திற்கு வேதனைகொள்ளும் மனமுடைய சான்றோர் பொருளைப் பாதுகாக்காமல் தம்மிடமுள்ளதை எல்லோர்க்கும் வழங்கிடும் இயல்பினராவர் என்பதனை,

**"நல்இசை வேட்ட நயனுடைய நெஞ்சின்**
**கடப்பாட் டாளனுடைப் பொருள்போல"** **(குறுந்.143:4-5)**

என்னும் மதுரைக்கணக்காயனார் மகன் நக்கீரனார் பாஸடிய பாடலின் வாயிலாக அறியமுடிகிறது. பிறர் துன்பத்தினைப் பொறுத்திராதவர்கள் அடுத்த பிறப்பின் நிலையை அறிந்து இவ்வாறான செயல்களைச் செய்கின்றனர் என்பதனை, "இப்பிறவியில் நல்லதைச் செய்தால் அடுத்த பிறவியில் நல்ல நிலையை அடையலாம் என்ற எண்ணத்தோடு அறம் செய்வதே பெரும்பாலோர் கொள்கை. இது ஒன்று கொடுத்து மற்றொன்று பெறும் வாணிக முறை போன்றது. பயன் கருதிச் செய்யப்படும் கொடை அருள் உணர்ச்சியால் உண்டாவதன்று" என்று மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

அறங்களில் எல்லாம் சிறந்தது கொடை கொடுப்பதேயாகும். அத்தகைய கொடைச்சிறப்பினை, "ஒருவர் தம் சொந்த நன்மையைக் கருத்தில்கொண்டு பிறர்க்கு நல்லனவற்றைச் செய்தல் கொன்று தின்பதற்காக விலங்குகளை ஊட்டி வளர்ப்பதற்கு ஒப்பாகும்" என்று நா.இராமையா பிள்ளை கூறுகின்றார். மேலும் ஏழ்மையை எண்ணி ஏளனம் செய்யாது தம்முடைய தகுதியையும், பெருமையையும் உணர்ந்து மலை போன்ற யானைகளையும், குதிரைகளையும், பசுக்களையும் கொடையாகக் கொடுத்தனர். தான் கனவிலும் காண முடியாத அளவு பரிசு கொடுத்தான்

மன்னன் எனக் கொடைத்திறம் புலவரால் புகழப்படுகிறது. பகைமன்னன் தந்த திறைப்பொருளை இரவலர், பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என வருவோர்க்கெல்லாம் வாரிவழங்கும் நிலையும் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது. மேலும், எதிரிகளால் வீழ்த்தப்பட்டு இறக்கும் நிலையில் கூட புலவருக்கு இல்லை என்று கூறாமல் வழங்கிய கொடைத்திறம் பெரும்பாலான மன்னர்களுக்கு இயல்பாய் அமைந்திருந்தது என்பதை,

**"பாடி வந்தது எல்லாம் கோடியர்**
**முழவு மருள் திருமணி மிடைந்தநின்**
**அரவுறழ் ஆரம் முகக்குவம் எனவே"** **(புறம்.368:16-18)**

என்னும் கழாத்தலையார் பாடிய பாடலானது புலப்படுத்துகிறது. அதைப் போன்றே, சங்கஇலக்கியங்களில் வள்ளல் தன்மையால் பெயர் பெற்றவர்கள் கடையெழுவள்ளல்கள். இவர்கள் ஒரு குறுகிய நிலப்பரப்பினை ஆண்டு வந்த காலகட்டத்தில் புலவர்களின் நிலை உயர்வடைந்தே காணப்பட்டது. மேலும் போர்க்காலங்களில் பிறர் நாட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட செல்வங்கள் அனைத்தையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர். இவர்களின் கொடைத்திறனை,

**"கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே**
**அதனால் செல்வத்துப் பயனே ஈதல்"** **(புறம்.189:4-7)**

என்று மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய பாடலின் வாயிலாக, அரசரானாலும் ஆண்டியானாலும் எல்லோர்க்கும் உணவு, உடைத் தேவை ஒன்று தான். எனவே தேடிய செல்வம் தனக்கே உரியது என்று எண்ணாமல் பிறருக்கும் தந்து மகிழ வேண்டும். அவ்வாறு பொருளைப் பிறர்க்கு அளிக்கும் ஈதலும், கொடையும் சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்பட்டது. இத்தகு கொடைக்குச் சான்று பகர்பவனாகக் கர்ணன் போற்றப்பட்டான்.

**"மழை கொடுக்கும் கொடையும் ஒரு இரண்டு மாதம்**
**வயல் கொடுக்கும் கொடையும் ஒரு மூன்று மாதம்**
**பசு வழங்கும் கொடையும் ஒரு நான்கு மாதம்**
**பார்த்திபனாம் கர்ணனுக்கோர் நாளும் மாதம்"**

என்று கர்ணனின் கொடை இன்றளவும் போற்றப்படுகிறது.

**கொடைப் பண்பு**

சங்ககாலத்தில் அனைத்து செயல்களையும் முறைமையாகச் செய்து வந்தனர். வறியவர்கள் பொருட் செல்வமுடையவரிடம் வந்து 'யாம் வறியவர்' என்று சொல்வதற்கு முன்பே குறிப்பால் உணர்ந்து, தம்மிடத்திலுள்ள பொருட்செல்வத்தைக் கொடுக்க முன்வருவர். இத்தகு கொடைப் பண்புடையவர்கள் பற்றி, "பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடெய்தாது, ஆகையால் பசியினைப் போக்குவதற்கே தம் செல்வம் முழுமையும் பயன்படுத்தி வந்தனர். செல்வம் படைத்தோர் வறுமையைப் போக்குவதற்குத் தம் செல்வம் முழுமையும் பயன்படுத்தியதால் வள்ளல்கள் என்று அழைக்கலானார்கள். சான்றோர்களால் இவர்கள் பாராட்டப்படுகின்ற காலத்தும், இவர்களது மாடமாளிகையையும் மதிப்பற்ற செல்வங்களையும் பாராட்டுதலின்றி பசியெனல் அறியாப்பணையில் இருக்கை என்றே பாராட்டப் பெற்றனர்" என்று க.பெரியசாமி கூறுகிறார். சங்ககாலத்தில் காதல், வீரம் மற்றும் கொடைப்பண்புகளே போற்றப்பட்டன. ஒவ்வோர் உயிரினங்களுக்கும் அடிப்படைத்தேவை உணவு, உடை, உறையுள் ஆகும். வறுமையில் வாழும் மக்களுக்கு, அவர்களின் தேவையை நிறைவு செய்பவன் வள்ளலாகக் காட்சி அளிக்கிறான். மன்னர்கள் மக்களுக்கும், புரவலர்களுக்கும் உணவு, உடை முதலியன வழங்கிக் காத்து வந்ததனை,

**"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறாவது இதுகேள் மண்ணுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்"** **(மணிமேகலை, 25:228-231)**

என்னும் அடிகளால் உணரமுடிகிறது.

கொடை அளிக்கும் வள்ளல்களைப் 'பசிப்பிணி மருத்துவன்', 'பாண்பசிப் பகைஞன்' என்று புலவர்கள் போற்றிவந்தனர். இவ்வாறு செல்வம் படைத்தோர் பெருங் கொடையாளராக விளங்கியதனால் தான், இரப்பவர்களும் இரத்தல் இழிவுடைத்தென்று என்று எண்ணாதிருந்தனர். இரவச்சம் அவர்களிடத்து இருந்தாலும் அது வளராதபடி வள்ளல்கள் திகழ்ந்தனர். கொடை நல்கும் ஒவ்வொரு முறையும் வரையாது நல்குபவன் வள்ளல் மாவள்ளியன் என்பது,

**"ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்**
**ஈத்தொறும் மாவள்ளியன்"** **(பதிற்று.61)**

என்னும் பாடலடிகளின் வழியாகப் புலப்படுகிறது.

பிறருக்குக் கொடுத்தலால் ஏற்படும் பொருளிழப்புக் கருதி வருந்தாமலும், பொருள் கொடுத்தலைக் கருதி மகிழாமலும் கொடையைக் கடமையாக மேற்கொண்டதையும் அறியமுடிகிறது. அனைவரும் விரும்பிப் போற்றும் அறமாகக் கொடை நிலவியது. அத்தகைய வாழ்வியல் கொள்கையில் வள்ளல்கள் பெரிதும் புகழப்பட்டனர். இச்செய்தியை,

**"இலம்பொடு ஒக்கல் தலைவன்"** **(புறம்.285)**
**"இல்லோர் ஒக்கல் தலைவன்"** **(புறம். 95)**
**"கொடைக்கடன் சுமர்ந்த கோடா நெஞ்சினன்"** **(பதிற்று.20)**
**"கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளம்"** **(பதிற்று.17)**

என்ற பாடலடிகள் வாயிலாகக் கொடைக் கடமையே ஆண்மைக்கடன் எனக் கொள்ளப்பட்டது. அதனை உணர்ந்து, உள்ளம் மகிழ்ந்து புகழ்ந்து சொல்லப்பட்டதனை அறியமுடிகின்றது.

**கொடை மடம்**

சங்ககாலத்தில் பண்டைய அரசருள் பலர்க்குக் கொடையானது சிறந்த குணமாயிருந்த போதே, ஒருவகையில் அறியாமையாகவும் இருந்தது. அது கொடைமடம் எனப்பட்டது. பேகன் விலை உயர்ந்த கலிங்கத்தை மயில்மேல் போர்த்தினான். பாரி தன் இழையணி நெடுந்தேரை முல்லைக்கொடி படர நிறுத்தியதோடு தனக்கிருந்த 300 ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னைப் பற்றி பாடிய குமட்டூர்க்கண்ணனார்க்கு 500 ஊர் பிரமதாயமும், முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டுள் வருவதனிற்பாகமும் கொடுத்தான். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் காப்பியாற்றுக் காப்பியனார்க்குப் பத்துப்பாட்டிற்கு நாற்பதிலக்கம் பொன்னும் தான் ஆண்டதில் பாகமும் கொடுத்தான். அ∴றிணை உயிர்களுக்குத் தகாத பொருள்களையும், அரசு கெடும்படி பரிசிலர்க்கு நாடு முழுவதையும் பல புலவர்கள் பசியால் வாட ஓரிரு புலவர்க்கு மாபெருஞ் செல்வத்தையும் அளித்தது கொடைமடமாகக் கருதப்பட்டதையும் அறியமுடிகின்றது.

**கொடை நோக்கம்**

இப்பிறப்பில் நல்வினை புரிந்து புகழ் எய்தியவரே மறுமை உலகத்தில் இன்பம் பெறுவர் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடையே நிலவியது. கொடையால் மறுமைப் பயன் அடையலாம் எனச் சிலர் கருதினர். சோழி ஏனாதி திருக்கண்ணனின் முன்னோன் இச்செய்தியினை,

> **ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச் சென்று உணீஇயர்**
> **உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன்" (புறம்.174:19-20)**

என்று கருதினர் என்பதை மாறோக்கத்து நப்பசலையார் பாடிய பாடலின் வாயிலாக அறியமுடிகின்றது. பரணர் பேகன் கொடையைப் புகழும் போது, அவன் மறுமை இன்பம் கருதிக் கொடை செய்யவில்லை, பிறர் வறுமை நோக்கியே கொடையறம் செய்தான் என அவனது கொடை நோக்கத்தைக் குறிப்பர். ஆய் அண்டிரனும் மறுமைப்பயன் கருதிக் கொடை வழங்கவில்லை.

சான்றோர் சென்ற நெறியெனத் தன் கடமையாகவே கொடை புரிந்தான் என முடமோசியார் அவனது கொடை நோக்கத்தைப் புலப்படுத்தினார். இச்செய்தியினை,

> **"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்**
> **அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்**
> **பிறரும் சான்றோர் சென்ற நெறிஎன**
> **ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே" (புறம்.134)**

என்ற அடிகளின் வாயிலாக உணரமுடிகிறது. பயன் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு கொடை செய்பவர்கள் தம் கொடைச்செயலால் பயன் கிடைக்காது என எண்ணினால் கொடையின் ஆர்வம் நீங்கி அந்த அறச்செயலைக் கைவிடுவர். வணிக நோக்கின்றிக் கடமை நோக்கமே கொண்டு கொடைபுரிவர். இவ்வாறான செயலை நிறுத்தாமல் தொடர்ந்து செய்வர். ஆகவே பயன் கருதாது செய்யும் கொடை நோக்கமே சிறந்தது, உயர்ந்தது. "பயனைப் பற்றி எண்ணாமல் கடமையையே செய்க" என்னும் கீதைப் பேருரைக்கு முடமோசியார் பாடல் இடமளிப்பதைக் காணமுடிகிறது.

**ஈகை-விளக்கம்**

தன்னிடம் உள்ளதை மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு உரிய ஆற்றலே ஈகையாகும். ஈகை செல்வப் பெருக்கிலிருந்து பிறப்பது அல்ல, மன வெளிப்பாட்டிலிருந்து உருவாவது. ஈகை என்னும் உயர்பண்பு தனிமனிதப் பண்பாக அமைகின்றது. தனிமனித எண்ணத்தில் உதித்தெழுந்தாலும் அதனுடைய பயன்கள் சமுதாயத்தைச் சென்று சேர்வதால் சமுதாய மதிப்பாகவும் எண்ணப்படுகின்றது. ஒருவனின் உள்ளத்தில் ஏற்படும் உணர்வானது மற்றவர் மீது செலுத்தும்பொழுது ஈகை என்னும்

பண்பாக மாற்றமடைகின்றது. மேலும் கொடுப்பவர் எதிர்பார்ப்புகளைத் தவிர்த்து மனநிறைவுடன் கொடுக்க, அதனை ஏற்பவர்கள் மனநெகிழ்வுடன் பெற்றுக் கொள்ளும் போதுதான் ஈகை என்னும் பண்பு மற்றவராலும் கடைப்பிடிக்கப்படும் உயர்பண்பாக நிலை பெறுகிறது. பிறர் தமக்கு ஈதல் செய்தால் மட்டுமே வாழமுடியும் என்னும் நிலையில் உள்ள வறியோர்க்குச் செய்யும் ஈகையே உயர்வாகக் கொள்ளப்படுகின்றது. தம்மால் இன்னொரு மனிதன் மகிழ்வுடன் வாழத் தலைப்படுகின்றான் என்ற உயர்நோக்கமே ஈதல் என்னும் குணத்தின் அடிப்படையாகும். இதனைத் தொல்காப்பியர்,

**“ஈயென் கிளவி இழிந்தோன் கூற்று”** **(தொல்.நூற். 928)**

என்று குறிப்பிடுகின்றார்.

மேலும்,

**“வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து”** **(குறள். 221)**

என்ற குறளின் வழியாகவும் புலப்படுகிறது.

**ஈகையில் உணவின் பங்கு**

மனிதன் நெறிபட வாழ்வதற்குக் கல்வியும் அதனைச் சார்ந்த எண்ணற்ற காரணங்களும் உண்டு. இருப்பினும் ஒருவனது ‘காய்வுறு கடும்பசி’ அகற்றுதலையே முக்கியமாகக் கருதுகின்றனர். ஏனெனில் அது ஒருவனது “பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்” என்கிறது மணிமேகலை. இசைபட வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை முதலிய காரணங்களும் உளவேனும் ‘உணவின் பிண்டம் உண்டி முதற்றே’ ஆதலின் உணவுக் கொடையே சிறந்தது என்பது தெளிவாக விளங்குகின்றது.

**ஈகைச் சிறப்பு**

ஈகைப் பண்பில் சிறந்த பெரியோர், ஏனையோர் தம்பால் வந்து வறுமை கூறி இரப்பதற்கு முன்பாகவே விரைந்து அவர்க்கு உதவுவர். இச்செய்தியினை,

**“இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள் போல்**
**பரந்து வெளிப்படாது ஆகி**
**வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே”** **(அகம்.276:13-15)**

என்ற பரணரின் பாடலடிகளால் அறியமுடிகிறது. இவற்றால் ஈவோர் செல்வம் பெருக வாழ்தலும்,ஈயாதோர் புகழ்பட வாழாமையும் அறிய முடிகின்றது. மேலும், இரப்பவருக்குப் பொருள் வேண்டும். உள்ள பொருள் செலவாகித் தொலைந்தமையால் இரப்பவரும், அறவே ஒன்றும் இல்லாத வறுமையால் இரப்பவரும், வேண்டுமளவு பொருளில்லாமையால் இரப்பவரும் என இரப்போருள் பல்வேறு வகையினர் உண்டு.

பிறர்க்கு உதவுதற்கும் நல்ல உள்ளம் அமைதல் வேண்டும். தன்னிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று மறுக்காது கொடுப்பது சிறந்தப் பண்புடைமையாகக் கருதப்பட்டது என்பதைப் புலப்படுத்துகிறது. இதனை,

**“இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்**
**நல்லது வெ·கி வினை செய்வார்”** **(பரி.10:87-88)**

என்று பாடல் வாயிலாகவும் அறிய முடிகிறது.

பிறர்க்கு ஈவதில் விருப்பமுடையோர்க்குச் செல்வம் பெருகுதல் இயல்பாகும். ‘பிறர்க்கொன்று ஈயாது வீயும் உயிர்தவப்பலவே’ என்றபடி ஈவோர் மிக அரியவராவர். ஈயாது செல்வத்தைச் சேர்த்து வைப்போர் பொருள் யாருக்கும் பயன்படாது அது அழிந்து போகும் என்பதனை,

**"செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே"** **(புறம்.189:7-8)**

என்று மதுரைக்கணக்காயனாரின் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

**பரிசிலின் சிறப்புகள்**

மன்னனிடம் உள்ளதை வறியவர்க்கு அளித்தல் கொடையாகக் கருதப்படுகிறது. மன்னனைப் புகழ்ந்து பாடுவதால் மகிழ்வுற்று அதன் வழியாகப் பெறப்படுவது பரிசிலாகக் கருதப்படுகிறது. மன்னர்களால் போற்றப்பட்ட புலவர்கள் வியக்கத்தக்க அளவிற்குப் பரிசில்களைப் பெற்றுள்ளனர். புலவர்தம் வாழ்க்கைநிலை ஆளுவோரின் ஆளுமை வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க நிலையில் இயல்பாகஅமைந்திருந்தது. இச்செய்தியை,

**"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி**
**நெடிய என்னாது சுரம்பல கடந்து**
**............................................**
**நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே"** **(புறம்.47)**

என்று கோவூர்க்கிழார் பாடிய பாடலின் வாயிலாகப் புலவர்களின் புலனொழுக்கற்ற புலமை வாழ்வைப் புலப்படுத்தியுள்ளார். புலவர்கள் எத்தகைய அச்சத்திற்கும் ஆட்படாது தமது நாவன்மையால் வெற்றி பெறும் சிறப்புடையவர்கள் என்பது புலப்படுகிறது.

**பொருளின் சிறப்பு**

மனித வாழ்விற்கு ஆதாரமாகப் பொருள் அமைந்துள்ளது. பொருள் இல்லாத வாழ்வின் இழிவையும் பொருளினால் வரும் உயர்வையும் இலக்கியங்கள் தெளிவாக விளக்கியுள்ளன. எனவே வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாகப் பொருளும் அமைந்து விடுகிறது.

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்**
**செய்வினை கைம்மிக எண்ணுதி"** **(குறுந்.63)**

என்ற உகாய்க்குடிகிழார் பாடிய பாடலின் வழியாகத் தலைவன் கூற்றின் வழி பொருளில்லாதவனுக்கு இரவலர்க்கு ஈவதால் வரும் மறுமை இன்பமும் கிடையாது. இவ்வுலக வாழ்க்கையை அனுபவிக்க முடியாததால் இம்மை இன்பமும் கிடையாது என்பதை விளக்கியுள்ளார். எனவே எக்காலத்திற்கும் உரிய வாழ்வியல் விழுமமாகப் பொருள் அமைந்திருப்பது புலனாகிறது. மக்களின் வாழ்வியலிலுக்குத் தேவையான செல்வம், சீரான வாழ்க்கைமுறைக்கு வித்திடும். நன்கு திட்டமிட்டு உழைத்துப் பணம் சேர்ப்பவர்கள் செலவுபோக எஞ்சியதில் ஒருபகுதியைச் சேமித்து இன்னொருபகுதியை அறச்செயல்களுக்கு அளிக்கவும் செய்வர். வருமானம் இல்லாமல் உண்ணும் இல்லோர் வாழ்க்கை இரந்து உண்பதிலும் இழிவானதாகக் கருதப்பட்டது.

**இரத்தல் இழிவு**

உழைத்து வாழ்க்கையில் முன்னேறாமல் இரந்துண்டு வாழ்தல் இழிவெனக் கருதப்பட்டது. இதனை,

**"ஈயென இரத்தல் இழிந்தன்று"** **(புறம்.204)**

என்னும் அடி புலப்படுத்துகின்றது. என்றாலும் பெரியோர்கள் தமக்கு வறுமை நேர்ந்த காலத்தும் ஈயென இரப்பதற்கு நாணுவர் என்பதை,

**"ஈயென இரத்தலோ அரிதே"** **(புறம்.154)**

என்று கூறி கொடு என்று கேட்பது கடினமானது தான் எனினும் கொடுப்பவனின் பெருங்குணத்தை எண்ணியே வாழ்ந்துள்ளேன் எனப் புலவர் பாடியுள்ளார். இரத்தலினும் இழிவுடையது வேறில்லை என்று துன்பத்தால் வருந்தி, இரந்து கேட்டவர்க்குக் கொடுத்த பொருளைத் திரும்பக் கொடுக்குமாறு 'தா' எனக் கேட்டல் இழிந்தது.

1. இவன் இல்லாதவன் என்று பழியாது கொடுத்தல்.
2. யான் இல்லாதவன் என்னும் பழிச்சொல் சொல்லாது கொடுத்தல்.
3. பிறிதொருவனிடத்தே போய் யான் இல்லாதவன் என்று இழிவுரைக்காவாறு கொடுத்தல்.
4. யான் இல்லாதவன் என்னும் இழிவினை இரவலன் கூறுமுன்னாகவே கொடுத்தல்.

எனப் பலவகையாகப் பொருள்படுகிறது என்பதைக் காணமுடிகிறது.

**கொடைக்குரிய பொருட்கள்**

புலவர்கள் வறுமை காரணமாகப் புரவலர்களை நாடிச் சென்று, அவர்களிடமிருந்து பல பொருட்களைப் பரிசிலாகப் பெற்று வந்தனர். பரிசில்விடை, பரிசில்கடாநிலை, பரிசில்துறை ஆகியவை என்ன பொருளை, என்ன காரணத்திற்காக, யார் யாரிடமிருந்து பெற்றனர் என்பதை விளக்குகின்றன. யானை ஒரு சூலுக்கு ஒரு கன்றுதான் ஈனுமே தவிர பலகன்றுகளை ஈனாது. அவ்வாறிருக்க, வள்ளல் ஆய் களிறுகள் பலவற்றைக் கொடையாக அளித்த தன்மையை,

**“இளம்பிடி ஒருசூல் பத்து ஈனுமோ” (புறம்.130)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியமுடிகிறது. வன்பரணர் பாடல் ஒன்றில், பசியோடு இருந்த புலவர்க் கூட்டம் கண்டீரக்கோப் பெருநள்ளியைக் காட்டில் சந்தித்தபோது அக்கூட்டத்திற்குத் தான் வேட்டையாடிய இறைச்சியைச் சுட்டுக் கொடுத்தான் என்ற செய்தியிலிருந்து (பதிற்று.61) பசியைப் போக்குவதும் கொடையாகவே கருதப்பட்டுள்ளது என்பது பெறப்படுகிறது. மேலும், முத்துவடஆரம், முன்கைக்கடகம் போன்றவையும் கொடைக்குரிய பொருட்களாக அளிக்கப்பட்டன. கள்ளும் கொடைக்குரிய பொருளாக இருந்துள்ளமை ஔவையின் பாடலடியால் (புறம்.235) அறிய முடிகின்றது.

குதிரை, யானை, தேர், புதுவருவாயையுடைய நாடு, ஊர் போன்றவையும் கொடையாக வழங்கப்பட்டன. அத்துடன் போரில் வெற்றி பெற்ற யானை அணிந்திருந்த முகபடாமும் அரசனின் ஆரமும் கொடைப் பொருளாகின. இவற்றால் பசித்துன்பம் போக்க உணவினையும், வறுமைத்துன்பம் போக்க யானை, குதிரை போன்றவற்றையும், அவை சுமக்குமளவு பொன்னையும் பொருளையும் புரவலர்கள் கொடையாக வழங்கியமை அறியப்படுகிறது.

**முடிவுரை**

கொடை என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக்கொள்வது. பரிசில் பெற்று வரும் புலவனே மன்னன் போல யானை மீதேறி வரும் செய்தியும் அறியப்படுகிறது. பிறருக்குக் கொடுப்பதில் அரசாட்சி புரிவோர் முதன்மை இடம் பெற்றுத்திகழ்ந்தனர். பிறர் துன்பத்திற்கு வேதனைகொள்ளும் மனமுடைய சான்றோர் பொருளைப் பாதுகாக்காமல் தம்மிடமுள்ளதை எல்லோர்க்கும் வழங்கிடும் இயல்பினராவர். பிறர் துன்பத்தினைப் பொறுத்திராதவர்கள் தம் அடுத்தபிறப்பின் நிலையை அறிந்து இவ்வாறான செயல்களைச் செய்கின்றனர். பொருளைப் பிறர்க்கு அளிக்கும் ஈதலும், கொடையும் சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்பட்டன. வறியவர்கள் பொருட் செல்வமுடையவரிடம் வந்து ‘யாம் வறியவர்’ என்று சொல்வதற்கு முன்பே குறிப்பால் உணர்ந்து, தம்மிடத்திலுள்ள பொருட்செல்வத்தைக் கொடுக்க முன்வருவர். செல்வம் படைத்தோர் பெருங்கொடையாளராக விளங்கியதனால் தான், இரப்பவர்களும் இரத்தல் இழிவுடைத்தென்று என்று எண்ணாதிருந்தனர். இரவச்சம் அவர்களிடத்து இருந்தாலும் அது வளராதபடி வள்ளல்கள் திகழ்ந்தனர். அனைவரும் விரும்பிப் போற்றும் அறமாகக் கொடை நிலவியது. பண்டைய அரசருள் பலர்க்குக் கொடையானது சிறந்த குணமாயிருந்தபோதே, ஒருவகையில் அறியாமையாகவும் இருந்தது. அது கொடைமடம் எனப்பட்டது. கொடையால் மறுமைப் பயன் அடையலாம் எனச் சிலர் கருதினர். தன்னிடம் உள்ளதை மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு உரிய ஆற்றலே ஈகையாகும். ஈகை செல்வப்பெருக்கிலிருந்து பிறப்பதல்ல, மன வெளிப்பாட்டிலிருந்து உருவாவது. மன்னனைப் புகழ்ந்து பாடுவதால் மகிழ்வுற்று அதன் வழியாகப் பெறப்படுவது பரிசிலாகக் கருதப்படுகிறது. புலவர்கள் வியக்கத்தக்க அளவிற்குப் பரிசில்களைப் பெற்றுள்ளனர். பொருள்

இல்லாத வாழ்வின் இழிவையும் பொருளினால் வரும் உயர்வையும் இலக்கியங்கள் தெளிவாக விளக்கியுள்ளன. எனவே வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாகப் பொருளும் அமைந்து விடுகிறது. வன்பரணர் பாடல் ஒன்றில், பசியோடு இருந்த புலவர்க் கூட்டம் கண்டீரக்கோப் பெருநள்ளியைக் காட்டில் சந்தித்தபோது அக்கூட்டத்திற்குத் தான் வேட்டையாடிய இறைச்சியைச் சுட்டுக் கொடுத்தான் என்ற செய்தியிலிருந்து (பதிற்று.61) பசியைப் போக்குவதும் கொடையாகவே கருதப்பட்டுள்ளது என்பது பெறப்படுகிறது. குதிரை, யானை, தேர், புதுவருவாயையுடைய நாடு, ஊர் போன்றவையும் கொடையாக வழங்கப்பட்டன. செல்வம் பெற்றோர் கொடையாளராக விளங்கினர். சுருங்கக்கூறின், கொடைப் பண்புடையவர்களாக விளங்கியவர்கள் சங்ககாலத் தமிழர்கள் என்பதை அறிய முடிகின்றது.